வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சில கூடுதல் பயன்பாட்டு நடவடிக்கைகளை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. வியக்கத்தக்க இந்தியா சுற்றுலா கொள்கை (Incredible India Tourism Policy) மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா (Eco Tourism) கொள்கையின்படி படுக்கை மற்றும் காலை உணவு வசதிகள் கொண்ட (Home Stay) நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தாவர மற்றும் குடியிருப்புப் பயன்பாட்டு மண்டலங்களில் (Vegetative and Residential Use Zones) அனுமதிக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானல் நகர், மலைவாழிடத்தில் உள்ளதாலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், கட்டட விதிமீறல்களை ஆராய்ந்து அவற்றை நெறிமுறைப்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட துறைகளின் ஆலோசனை பெறப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தேவைப்படும் இனங்களில் மலையிடப் பாதுகாப்பு குழுமத்தின் (HACA Committee) அனுமதியுடன் கட்டடங்களை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–25

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) கம்பம் மற்றும் கடையநல்லூர் தொகுதிகள், வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர் சேதங்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில் இருக்கிற மலையடி கிராமத்தில் கடந்த 10–6–2019 அன்று அதிகாலையில் யானை தாக்கி அய்யாவு என்பவர் இறந்துவிட்டார். எத்திராஜ் என்பவர் யானை தாக்குதலினால் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார். கடந்த ஆண்டும் இதே மாதிரி நிகழ்வு ஏற்பட்டது என்பதையும், கடந்த 6 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 11 பேர் பலியாகியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று, தங்கள் மூலமாக சபையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட கருப்பா நதி அருகில் இருக்கக்கூடிய சொக்கம்பட்டி, அடவிநயினார் அணைக்குட்பட்ட மேல்கரை, வடகரை, வைரவன்குளம், கருஞ்சானப்பேரி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 20 நாட்களாக யானைகள் ஊருக்குள்ளே வந்து அங்கே இருக்கக்கூடிய தென்னை, தென்னை குருத்துகள், வாழை, மா மரம், வெள்ளரிச் செடி மற்றும் அங்கே இருக்கக்கூடிய மோட்டாருக்கு செல்லக்கூடிய பைப் அனைத்தையும் பிடுங்கியதால், விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

காட்டு யானைகள் வருவதோடு, மான்களும் வெளியே வந்து சாலைகளில் நடமாடுவதன் காரணமாக விபத்தில் சிக்கி இறக்கக்கூடிய சூழ்நிலை அங்கே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கடந்த 20 நாட்களாக இந்தப் பிரச்சினை அங்கே தலைவிரித்தாடுவதாக, தொடர்ந்து பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதி என்பது விவசாயம் நிறைந்த தொகுதியாகும். ஏற்கெனவே, ஈத்தல் தொழில் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள். இப்போது யானைகளால் விவசாயிகளெல்லாம் முழுமையாகப் பாதிக்கப்பட்டு அவர்கள் கண்ணீர் வடிக்கக்கூடிய நிலையில் இருப்பதால், 'இதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்' என்று தொடர்ந்து எங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

2019 ஜூலை 12] *[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]*

அதேபோல, வன விலங்குகளால் விவசாயிகளெல்லாம் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். அது சம்பந்தமாக ஒரு நிரந்தரமான தீர்வை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

(இ) கேரளாவிற்கு புளியரை வழியாக வைக்கோலை தொடர்ந்து எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, வைக்கோலை கேரளாவிற்கு எடுத்துச் செல்லக்கூடிய பகுதி புளியரை. ஏனென்றால் வாசுதேவநல்லூர், வள்ளாலன்கோட்டை, குலசேகரமங்கலம், புளியரை வழியாகத்தான் செங்கோட்டையில் இருக்கக்கூடிய விவசாயிகள் 60 ஆண்டுகாலமாக வைக்கோல்களை கேரளாவிற்கு எடுத்துச்செல்கிறார்கள். இப்போது அதையும் எடுத்துச் செல்ல முடியாத அளவிற்கு காவல் துறையினரெல்லாம் அங்கே கெடுபிடி செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளின் நண்பனாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, கேரளாவிற்கு புளியரை வழியாக வைக்கோலை தொடர்ந்து எடுத்துச்செல்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.*

(ஆ) கம்பம் மற்றும் கடையநல்லூர் தொகுதிகள், வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர் சேதங்கள் குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி வனக் கோட்டம், உத்தமபாளையம் வனச் சரகத்தில் தேவாரம் பகுதியில் 6 காட்டு யானைகள், 20 ஆண்டு காலமாக சுற்றித் திரிவதோடு, வறட்சி காலங்களில் வனத்தை விட்டு வெளியே வந்து, வனத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிகள் மற்றும் விவசாய நிலங்களில் நுழைந்து சேதங்களை விளைவித்து வருகின்றன. இவ்வாறு காட்டு யானைகள் வனத்தை விட்டு வெளியே வந்து பட்டா நிலங்களில் புகுந்து தொல்லைதரும் காலங்களில், வருடந்தோறும் தனிக் குழுக்கள் அமைத்து அவற்றை வனத்திற்குள் திருப்பி*

அனுப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில்கூட காட்டு யானைகளை விரட்ட தனிக் குழு அமைத்ததோடு, இரண்டு கும்கி யானைகள் ஆனைமலை புலிகள் காப்பகத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, தேவாரம் வனப் பகுதியிலிருந்து காட்டு யானைகள் மீண்டும் வனப் பகுதிக்கு விரட்டப்பட்டன. மீண்டும் அக்டோபர் 2018–ல் காட்டு யானைகளால் இதே இடத்தில் பிரச்சினை ஏற்பட்டதால், முதுமலை புலிகள் காப்பகத்திலிருந்து இரண்டு கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டு காட்டு யானைகள் மீண்டும் வனத்திற்குள் திருப்பி அனுப்பப்பட்டன. மேலும், கம்பம் சட்டமன்றத் தொகுதியில் 2018–2019 ஆம் நிதியாண்டில் 44.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு 144.183 இலட்சம் ரூபாய் செலவில் யானை புகா அகழிகளும், 20 கிலோ மீட்டர் நீளத்திற்கு சூரிய சக்தி மின் வேலிகள் 32.40 இலட்சம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11–30

தேனி வனக் கோட்டம், உத்தமபாளையம் வனச் சரகத்தில் 2018–2019 ஆம் நிதியாண்டில் யானைகள் பட்டா நிலங்களுக்குள் நுழைவதைத் தடுக்கும்பொருட்டு, யானைகள் திட்டத்தின்கீழ் ரூ.81.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் ரூ.9.09 இலட்சம் செலவில் விளை நிலங்களுக்குள் புகுந்த காட்டு யானைகளை மீண்டும் வனத்திற்குள் திருப்பியனுப்ப தனிப் படை அமைத்து, 1,200 மனித வேலை நாட்களில் ரூ.4 இலட்சமும், கிராமங்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்வதற்கு ரூ.1 இலட்சமும், யானைகளால் ஏற்பட்ட உயிரிழப்பிற்கு ரூ.4.09 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன. நடப்பு 2019–2020 ஆம் நிதியாண்டில் சூரிய சக்தி மின் வேலி அமைத்தல், யானைபுகா அகழிகள் அமைத்தல், உயர் கோபுரங்களை அமைத்து, camera பொருத்தி, காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணித்தல், யானைகள் வருவதை முன்கூட்டியே அறிவிக்கச் செய்யும் கருவிகளை நிறுவுதல், ஆளில்லா விமானம்மூலம் யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.72.51 செலவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2019 ஜூலை 12] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

தேவாரம் கிராமத்தில் வனப் பகுதியின் அருகில் உள்ள பட்டா நிலங்களில் காட்டு யானைகள் தாக்கி ஆர். சேகர் என்பவர் 12–6–2018 அன்றும், ரா. அய்யாவு என்பவர் 10–6–2019 அன்றும் உயிரிழந்துள்ளனர். இவர்களில் ஆர். சேகர் என்பவரின் வாரிசுதாரருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ரூ.4 இலட்சம் நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. ரா. அய்யாவு என்பவரின் வாரிசுதாரருக்கு 10–6–2019 அன்று நிவாரணத் தொகையாக ரூ.50,000/– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாரிசுதாரரிடம் இறந்தவரின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, வாரிசுதாரர் சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், எஞ்சிய நிவாரணத் தொகையான ரூ.3,50,000/– வழங்கப்படும். 10–6–2019 அன்று காட்டு யானை தாக்குதலால் காயமடைந்த திரு. குப்புசாமி என்பவரிடமிருந்து அதற்கான மனு, காயங்கள் தொடர்பான மருத்துவச் சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்கள் கோரப்பட்டிருக்கின்றன. அவற்றை அளிக்கும்பட்சத்தில், அதற்குரிய நிவாரணத் தொகை வழங்கப்படும்.

தேவாரம் வனப் பகுதியில் இருக்கின்ற பிரச்சினைகள் பற்றி அறிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்களும், நானும், வன இலாகா அதிகாரிகளோடு சென்று, கொட்டும் மழையிலே அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டோம். அங்குள்ள பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்களும் கூறியிருக்கிறார்கள். அங்குள்ள வன அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் சீரும், சிறப்புடனும் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தப் பிரச்சினை மிக விரைவில் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2019 ஜூலை 12

அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வனச் சரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சொக்கம்பட்டி கிராமம், கருப்பா நதி அணைப் பகுதி, மேல்கரை, வடகரை பகுதிகள், இரண்டாற்றுமுக்கு, வைரவன்குளம், கருஞ்சானப்பேரி பகுதி, சொக்கம்பட்டி திரிபுரக்கூடத்திலிருந்து கருப்பா நதி அணைக்குச் செல்லும் வழி, அடவிநயினார் அணை போன்ற இடங்களெல்லாம் நெல்லை வன உயிரின சரணாலயப் பகுதிக்கு மிக அருகிலுள்ள பகுதிகள் என்பதால் யானைகள் வனத்தைவிட்டு வெளியே வந்து குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழைந்துவிடுகின்றன. இதனைத் தடுக்க வேண்டி, வனப் பணியாளர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் அதி விரைவுக் குழு–Rapid Response Team பணியாளர்களைக் கொண்டு, இரவு, பகலாக ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு, யானைகள் மீண்டும் காப்புக் காட்டுக்குள் திருப்பியனுப்பப்படுகின்றன.

முற்பகல் 11–35

மேலும், கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட விவசாயிகளையும், விளை நிலங்களையும் வன உயிரினங்களிடமிருந்து பாதுகாக்க வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் பல்வேறு திட்டங்களின்கீழ் வன உயிரினங்கள் விவசாய நிலங்களுக்குள் வருவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரூ.50.92 இலட்சம் செலவில் 19.75 கி.மீ. தூரத்திற்கு யானை புகா அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. இதுதவிர, நடப்பு விதிகளின்படி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பயிர் சேதங்களுக்கு 39 விவசாயிகளிடமிருந்து உரிய ஆவணங்களைப் பெற்று, ரூ.5.045 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, தேவைக்கேற்ப நடப்பு நிதியாண்டிலும், யானை புகா அகழிகள், தனிப்படை அமைத்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.